## கோட்டக் கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று

## தரம்- 05 அலகுப்பரீட்சை - 01 தமிழ் நேரம் - 45 நிமிடங்கள்

**01) பின்வரும் பாடலை வாசித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மீனினம் ஓடிப்பரக்குதம்மா-ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று செல்லுதம்மா.
வானும் கடலாக மறுதம்மா-இந்த.
மாட்சி உள்ளம் முழுகுதம்மா.

1.கவிஞர் மீனிம் எனக் குறிப்பிடப்படுவது எதனை.

..............................................................................................................................

2.இப்பாடலில் நிலாவிற்கு எது ஒப்பிடப்படுகின்றது.

..............................................................................................................................

3.வானம் எவ்வாறாக காட்சி அளிப்பதாக கூறப்பட்டுள்ளது.

..............................................................................................................................

4.மாட்சி என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................................................

5.வெள்ளி + ஓடம் என்பதைச் சேர்த்து எழுதுக.

..............................................................................................................................

**(புள்ளிகள்(5×4=20)**

**02) (அ) பகுதிக்கு பொருத்தமான விடையை (ஆ) பகுதியுடன் தொடர்பு படுத்துவோம்.**

| அ | ஆ |
|---|---|
| 1.அரை | துன்பம் |
| 2.கூறை | அம்பு |
| 3.கலி | இரண்டில் ஒரு பகுதி |
| 4.வளம் | திருமணச் சேலை |
| 5.பாணம் | செழிப்பு. |

**புள்ளிகள் (5×4=20)**

**03.சரியாயின் (√) சரி எனவும் பிழையாயின் (×) பிழை எனவும் அடையாளமிடுக.**

1. உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டு ஆகும் ( )
2. வல்லின எழுத்துக்கள். ங்.ஞ்.ண்.ந்.ம்.ன் ஆகும். ( )
3. ∴ என்பது ஆயுத எழுத்தாகும். ( )
4. தமிழ் நெடுங்கணக்கில் இரு நூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் உள்ளன. ( )
5. முதல் எழுத்துக்கள் முப்பது ஆகும். ( )

**புள்ளிகள் (5×4=20)**

**04. மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. தமிழில் உள்ள மெய் எழுத்துக்கள் எத்தனை.

   1. முப்பது 2.. பதினெட்டு 3. பன்னிரெண்டு.

2. பின்வரும் எழுத்துக்களுள் உயிர்மெய் எழுத்தாக அமைவது எது?

   1. அ 2.. ம் 3. சி

3. இடையின எழுத்துக்களை கொண்ட தொகுதி எது?

   1. ய்.ர்.ல்.வ்.ழ்.ள். 2. ங்.ஞ்.ண்.ந்.ம்.ன். 3. க்.ச்.ட்.த்.ப்.ற்.

4. அம்புயம் என்பதன் ஒத்த சொல் எது?

   .1. சூரியகாந்தி 2. தாமரை 3. அல்லி

5.பொன்+குடம் என்பதை சேர்த்து எழுதினால்.

   1. பொற்குடம். 2.பொன்குடம். 3. பொன்க்குடம்.

**புள்ளிகள் (5×4=20)**

05). பின்வரும் ஓர் எழுத்துச் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| நா | ஆ | தை | கோ | மா |

1. அரசனைக் குறிப்பது.........................................................................
2. மாதம் ஒன்று...................................................................................
3. பசுவைக் குறிக்கும் எழுத்து...........................................................
4. குதிரையைக் குறிப்பது....................................................................
5. பேச உதவும் எழுத்து.......................................................................

**புள்ளிகள் (5×4=20)**

## கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
## தரம்- 05 அலகுப்பரீட்சை-02 தமிழ் நேரம் - 45 நிமிடங்கள்

**01).பின்வரும் பந்தியைதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கண்சிமிட்டி மலரும் கமல மலர்களும் இதர மலர்களும் தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல் போல இதழ் விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒருபுறம் வண்ணவண்ண இறக்கைகளால் சிறகடித்து பறந்து திரியும். வண்ணத்துப் பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போல் பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

1.பந்தியில் குறிப்பிடப்பட்ட காட்சி எந்த வேளைக்குரியது.

..........................................................................................................

..........................................................................................................

2.கமலம் என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்லை எழுதுக.

..........................................................................................................

3.பந்தியில் இடம் பெற்றுள்ள அடுக்குமொழி எது?

..........................................................................................................

4.சிறுவர்களையும் பெரியவர்களையும் மகிழ்வித்த பிராணி எது?

..........................................................................................................

5.குருவி கீச்சிடும் என்பதைப் போல வண்டுகள்.

..........................................................................................................

**(புள்ளிகள் 5×4=20)**

02. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

1. காரிருள்.....................................................................
2. கடலோரம்.....................................................................
3. காலைக்காட்சி.............................................................
4. புற்றரைகள்..................................................................
5. வண்ணச்சிட்டு..............................................................

(புள்ளிகள் 5×4=20)

03. அடைப்புக்குள்லுள்ள சொற்களுள் பொருத்தமான சொல்லை தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

1. நான்....................( வலியால் / வளியால் ) துடித்தேன்.
2. பறவைகள் காலை வேளையில்..................( இரை / இறை ) தேடிப்பறந்தன.
3. கமலா கோயிலை....................(வலம் / வளம் ) வந்தாள்.
4. இயற்கை தந்த கொடையான..........................( மரங்களை / மறங்களை ) நாம் அழிக்கக்கூடாது.
5. அதிபர் காலைக் கூட்டத்தில்.............................( உரை / உறை ) ஆற்றினார்.

**(புள்ளிகள் 5×4=20)**

**04. பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மைவாக்கியமாக மாற்றி எழுதுக.**

1 .எங்கள் வீட்டில் கணினி உண்டு.

..........................................................................................

2. பட்டம் காற்றில் ஆடி அசைந்தது.

..........................................................................................

3. கழுகு வானில் வட்டமிட்டது.

..........................................................................................

4. குரங்கு மரத்திற்கு மரம் தாவியது.

..........................................................................................

5. பேரூந்து வேகமாகச் சென்றது.

.......................................................................................

5). பின்வரும் காட்சிப் படத்தை அவதானித்து நிகழ்காலத்தில் எழுவாய் பயனிலை தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைந்த ஐந்து சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1.................................................................................................................................

.................................................................................................................................

2.................................................................................................................................

.................................................................................................................................

3.................................................................................................................................

.................................................................................................................................

**(புள்ளிகள்-20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று.
# தரம்- 05 அலகுப்பரீட்சை - 03 தமிழ் நேரம் - 45 நிமிடங்கள்.

**01).பின்வரும் பாடலை வாசித்து வினாக்ளுக்கு விடை எழுதுக.**

இரவும் பகலும் எதற்கு? - மனம்.
இன்பம் துன்பம் உணர!
மேடுபள்ளம் எதற்கு? -திறன்.
மேன்மை தாழ்மை உணர
காயும் கனியும் எதற்கு? - சொற்
கடுமை இனிமை உணர!
வெயிலும் மழையும் எதற்கு? - உள்ளக்.
கடுமை அன்பு உணர!

1. பாடலில் இரவும் பகலும் எதற்கு எனக் கவிஞர் கூறுகின்றார்?
   .................................................................................................................
2. பாடலில் இடம் பெற்ற இணைமொழிகள் இரண்டு எழுதுக?
   .................................................................................................................
3. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக?
   1. காய்..........................................
   2. இரவு........................................
   3. பிறப்பு......................................
   4. ஆக்கம்..................................
3. காயும் கனியும் எதற்கு என கவிஞர் கூறுகின்றார்?
   .................................................................................................................
5. கனி என்பதற்கு ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?
   .................................................................................................................

**புள்ளிகள்(5×4=20)**

02. சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. ஈகை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   1. கொடை 2. உலோபம் 3. இரவல்
2. பெருமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
   1. அருமை 2. சிறுமை 3. உயர்வு
3. மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம் இதில் மாற்றான் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   1. நண்பன். 2.பகைவன். 3. கள்வன்.
4. நாகரீகம் என்பதன் எதிர்ப்பதம் எது.
   1. கலாசாரம். 2 அநாகரீகம். 3. பாரம்பரியம்.
5. பனுவல் எனும் சொல் குறிப்பது.
   1. சஞ்சிகை. 2. பத்திரிகை. 3. நூல்.

**புள்ளிகள்(5×4=20)**

03."அ" பகுதிக்கு பொருத்தமான விடையை "ஆ"பகுதியுடன் தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. குறவன் | ஒன்றன்பால் |
| 2. ஓடியது | ஆண்பால் |
| 3. குளிக்கின்றனர் | பெண்பால் |
| 4. விழுந்தாள் | பலவின் பால் |
| 5. நடந்தன | பலர்பால் |

**புள்ளிகள்(5×4=20)**

04. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.

1. பாலகி.............................................................
2. அரசன்.............................................................
3. உழவன்..........................................................
4. வீரன்...............................................................
5. விதவை..........................................................

**புள்ளிகள்(5×4=20)**

05.**பரிசளிப்புவிழா ஒன்றின் போது கூடுதலான பரிசுகளைப்பெற்றுக் கொண்ட உமது மனநிலை.** என்னும் தலைப்பில் எழுவாய் பயனிலைத் தொடர்பு எழுத்துக் கூட்டல் சரியாக அமையும் வண்ணம் ஐந்து சொற்களுக்கு குறையாமல் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1.....................................................................................................................................

2........................................................................................................................................

3........................................................................................................................................

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தரம்- 05 அலகுப்பரீட்சை - 4 தமிழ் நேரம் - 45 நிமிடங்கள்.

**01). பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

காட்டில் சிங்கம் ஒன்று மனிதன் விரித்த வலையில் விழுந்து துடித்தது. ஒரு நுளம்பு பறந்து வந்து சிங்கத்தின் மூக்கில். கடித்தது. சிங்கம் நுளம்பை பார்த்து கர்ச்சித்து மிரட்டியது. "**உனக்கு என்ன தைரியம்**"? சிங்கராஜாவையே கடிக்குமளவுக்கு. தைரியம் உனக்கு எப்படி வந்தது? என்று கேட்டது.

1. பந்தியில் இடம் பெற்ற இரண்டு பிராணிகளின் பெயர்களை எழுதுக.
   ………………………………………………………………………………………………
2. "உனக்கு என்ன தைரியம்" இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.
   ………………………………………………………………………………………………
3. பந்தியில் இடம் பெற்றுள்ள இரண்டு நிறுத்தற் குறிகளின் பெயரை எழுதுக?
   ………………………………………………………………………………………………
4. பலவீனம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
   ………………………………………………………………………………………………
5. ஆந்தை அலறும் என்பது போல சிங்கம்.
   ………………………………………………………………………………………………

**(புள்ளிகள் 5×4=20)**

**02. பின்வரும் சொற்களை திணையின் அடிப்படையில் அட்டவணைப்டுத்துக.**

{கதிரை, விமானம், தங்கை, ஆசிரியர், ஒட்டகம் , மாமா, வைத்தியர் , காடு, உலகம் ,கணவன்}

| | உயர்திணை | | அ∴றிணை |
|---|---|---|---|
| 1 | | 1 | |
| 2 | | 2 | |
| 3 | | 3 | |
| 4 | | 4 | |
| 5 | | 5 | |

**(புள்ளிகள் 5×4=20)**

**03. சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

1.மாமா வந்தார் என்பது உயர்திணை ஆண்பால் வாக்கியமாகும். (   )
2.யாழினி சந்தைக்குச் சென்றாள் என்பது அ∴றிணை பெண்பால் வாக்கியமாகும். (   )
3.மக்கள் என்பது பலர்பாலைக் குறிக்கும் சொல்லாகும். (   )
4.அம்மா சோறு சமைத்தார் என்பது உயர்திணை பெண்பால் இறந்த கால வாக்கியமாகும். (   )
5.யானை மரத்தை முறித்தது என்பது அ∴றிணை ஒன்றன்பால் பன்மை வாக்கியமாகும். (   )

**(புள்ளிகள் 5×4=20)**

04)பின்வரும் சொற்கள் குறிக்கம் இடத்தை எழுதுவோம்.
உதாரணம் - நான் - தன்மை

1. நாங்கள்--------------------------------------------------------------------------
2. அவன்-----------------------------------------------------------------------------
3. நீ----------------------------------------------------------------------------------
4. புத்தகம்-------------------------------------------------------------------------
5. நீங்கள்---------------------------------------------------------------------------

**(புள்ளிகள் 5×4=20)**

**05) பின்வரும் வினைச் சொற்களை மூன்று காலங்களிலும் அதன் எதிரே எழுதுக.**

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| உதாரணம் - படி - | படித்தேன் | படிக்கின்றேன் | படிப்பேன் |

| | சொற்கள் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1 | இரு | | | |
| 2 | எடு | | | |
| 3 | உண் | | | |
| 4 | தா | | | |
| 5 | விரும்பு | | | |

**(புள்ளிகள் 5×4=20)**

கோட்டக்கல்வி அலுவலகம் -ஈச்சிலம்பற்று
ம்- 05 அலகுப்பரீட்சை-05 தமிழ் நேரம் 45 நிமிடங்கள்

01)பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

பருத்தித்துறை யூராம்.
பவளக் கொடி பேராம்.
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்.
அங்கவட்கோர் நாளில்
அடுத்ததுயர் கேளிர்.

1.பாடலில் இடம் பெற்ற ஊர் ஒன்றின் பெயரை எழுதுக?

..........................................................................................................

2.பாவை என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?

..........................................................................................................

3."பாலெடுத்து" என்பதை பிரித்து எழுதுக?

..........................................................................................................

4.பாடல் இடம் பெற்ற ஒரு பெண்ணின் பெயர் என்ன?

..........................................................................................................

5.இப்பாடலை ஆக்கிய கவிஞரின் பெயர் என்ன?

..........................................................................................................

**(புள்ளிகள்5×4=20)**

02)**.பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1.கடலில் கப்பல் செல்லும். என்னும் வாக்கியத்தில் உள்ள எழுவாய்ச் சொல்லை எழுதுக?

..........................................................................................................................................

2.மாமா வீட்டிற்கு வந்தார். என்னும் வாக்கியத்தில் உள்ள பயனிலைச் சொல்லை எழுதுக?

..........................................................................................................................................

3.வெள்ளை முயல் வேகமாக ஓடியது. இவ்வாக்கியத்தில் இடம் பெற்ற செயற்படு பொருள் என்ன?

..........................................................................................................................................

4.ஆடு குழை தின்னும்.

எழுவாய்.......................... பயனிலை........................
செயற்படுபொருள்................................

5.பாத்திமா புத்தகம் வாசித்தாள்.

எழுவாய்.......................... பயனிலை........................
செயற்படுபொருள்................................

**(புள்ளிகள்5×4=20)**

**03.சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1.காலப் பெயரைக் காட்டும் சரியான சொல் எது?

1.கோடை 2. பட்டம். 3. கதிர்காமம். 4. இனிமை.

2.பொருட் பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது?

1. நிலாவெளி. 2. மார்கழி. 3. சதுரம். 4. பலகை.

3.இடப் பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது.?

1. கார்த்திகை. 2. கிளைகள். 3. பூவசரசங்குளம். 4. கருமை.

4.தொழிற் பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது.?

1.இனிப்பு. 2.விவசாயம். 3. உணவு. 4. சூரியன்.

5.சினைப் பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது?

1. முத்திரை. 2. இலைகள். 3. புத்தளம். 4. சூரியன்.

**(புள்ளிகள்5×4=20)**

**04.பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

**முற்றுப் புள்ளி(.) காற்புள்ளி(,) வினாக்குறி(?) வியப்புக்குறி(!) மேற்கோட்குறி(“ ”)**

1. புத்தக விழாவில் நாங்கள் பல அரிய நூல்களைப் பார்த்தோம்
2. காந்தனின் மாமா காந்தனை எதற்காக வாழ்த்தினார்
3. என்ன நண்பா என்ன பிரச்சினை
4. மழை வரும் போல தோன்றுகிறது
5. ஆமாம் நண்பரே என்ன செய்வது

**(புள்ளிகள்5×4=20)**

**05.பின்வரும் பேச்சுவழக்குச் சொற்களை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.**

1. புட்டு........................................ 2. நாங்க...............................................................

3. பதட்டம்...................................... 4. அங்க......................... 5. வெத்தில.......................

**(புள்ளிகள்5×4=20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று.

## தமிழ்

தரம் -05 அலகுப்பரீட்சை - 06 நேரம்-45 நிமிடங்கள்.

**01). பின்வரும் பாடல் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

மலையில் வந்து முகில்கள்-கூட.
வண்ண மயிலும் ஆடுது.
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்தமாய் ஆடுது.

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது.
கொப்புக் கொப்பாய் தாவிப்பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

1.இப்பாடலில் இடம் பெற்றுள்ள இரு பிராணிகளின் பெயர்களை எழுதுக?

1..................................................... 2...........................................................

2.ஆனந்தம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?

...............................................................................................................

3.கோலமயிலின் கூத்தைக் கண்டு தாளம் போடும் பிராணி எது?

...............................................................................................................

4.பாடலில் இடம் பெற்றுள்ள அடுக்கு மொழியை எழுதுக?

...............................................................................................................

5.அழகு என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

...............................................................................................................

**(புள்ளிகள் 5×4=20)**

**02) சுருக்கமான விடை எழுதுக.**

1. இரு திணைகளும் எவை?

1 ....................................................... 2 ...................................................

2. இரு சுடர்களும் எவை?

1 ......................................................... 2 .....................................................

3.ஐம் பூதங்களை எழுதுக?

1 ......................... 2 ......................... 3 ......................... 4 .......................... 5 ...........................

4.முக்கனிகளும் எவை?

1................................ 2..........................................
3......................................

5.முத்தமிழ்களும் எவை?

1....................................... 2............................................
3....................................

**(புள்ளிகள் 5×4=20)**

03) **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடை வெளி நிரப்புக.**

| நான் | நீ | நாங்கள் | மரம் | நீங்கள் |
|---|---|---|---|---|

1.தன்மை ஒருமைச் சொல் .....................................................

2.தன்மைப் பன்மைச்சொல் ......................................................

3.முன்னிலை ஒருமைச் சொல் ...................................................

4.முன்னிலைப் பன்மைச்சொல் ...................................................

5.படர்க்கை ஒருமைச் சொல் .....................................................

(புள்ளிகள் 5×4=20)

04. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| | சொல் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | படித்தோம் | | | | | |
| 2 | ஓடினார்கள் | | | | | |
| 3 | நீந்துகின்றன | | | | | |
| 4 | பறக்கின்றது | | | | | |

**(புள்ளிகள் 5×4=20)**

05) பின்வரும் காட்சிப்படத்தை அவதானித்து நிகழ்காலத்தில் ஐந்து சொற்கள் கொண்ட மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1.............................................................................................

.............................................................................................

2.............................................................................................

.............................................................................................

3.............................................................................................

.............................................................................................

**(புள்ளிகள் =20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தரம்- 05 அலகுப்பரீட்சை-07 தமிழ் நேரம்-45 நிமிடங்கள்

**01).பின்வரும் உரைப்பகுதியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

எம்மிடம் காணப்பட வேண்டிய உன்னதமான பண்புகளில் ஒன்று பொறுமை பேணுதல் ஆகும். நற்பண்புகளான அன்பு,அடக்கம், வாய்மை, சினங்கொள்ளாமை போன்ற அனைத்திற்கும் மேலானது பொறுமையாகும். பொறுத்தார் பூமியாழ்வார் என்பது சான்றோர் வாக்காகும் இதை வள்ளுவர் பொறுமையுடைமை என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

1.எம்மிடமுள்ள நற்பன்புகள் நான்கை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக?

1..............................................................
2..............................................................

3..............................................................
4..............................................................

2.எம்மிடம் காணப்பட வேண்டிய உன்னதமான பண்பு எது?

.......................................................................................................................

3.பந்தியில் இடம் பெற்ற சான்றோர் வாக்கு ஒன்றை எழுதுக?

.......................................................................................................................

4.சினங்கொள்ளாமை என்பதை பிரித்து எழுதுக?

.......................................................................................................................

5.வாய்மை என்னும் சொல்லின் ஒத்தகருத்து சொல்லினை எழுதுக?

..............................................................................................................

**(புள்ளிகள் 5×4=20)**

**02. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுக.**

1.திருக்குறள் / அறநூல் / உலகப்புகழ் / இலக்கியமாகும் / பெற்ற

..............................................................................................................

2.அரசன் / தவறாத / மனுநீதி / அரிச்சந்திரன்

..............................................................................................................

3.உயர்வு / உண்மையில் / பெற்ற / அரிச்சந்திரன் / அரசன் / ஆவான்.

..............................................................................................................

4.அம்மாவும் / சந்தைக்குச் / அக்காவும் / சென்றார்கள்.

..............................................................................................................

5.ஆச்சிரமம் / முனிவர்கள் / ஆகும் / வாழுமிடம்

..............................................................................................................

(புள்ளிகள்×4=20)

**03.பின்வரும் சுயவிபரப்படிவத்தை நிரப்புக.**

1.முழுப்பெயர்:-.......................................................................................................

2.முகவரி:-...............................................................................................................

3.பிறந்த திகதி:-.....................................................................................................

4.தொலைபேசி இலக்கம:-........................................................................................

5.வயது:-..................................................................................................................

6.குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை:-..........................................................

7.கல்வி கற்கும் தரம:-.............................................................................................

8.கல்வி கற்கும் பாடசாலை:-..................................................................................

9.விருப்பமான விளையாட்டு:-.................................................................................

10.விருப்பமான உணவு:-..........................................................................................

**(புள்ளி10×2=20)**

**04)பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக**

1. பால் + குடம் =.............................................
2. பகல் + பொழுது =....................................
3. பொன் + குடம் =....................................
4. பல் + பசை =.............................................
5. முள் + செடி =.............................................
6. நாள் + காட்டி =.............................................
7. வாள் + போர் =.............................................
8. கண் + புலம் =.............................................
9. கல் + குகை =.............................................
10. முள் + காடு =.............................................

**(புள்ளி10×2=20)**

05.என் மனதைக் கவர்ந்த கோயில்த் திருவிழாக்காட்சி பற்றி எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக அமைந்த

ஐந்து சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1) .....................................................................
.....................................................................................

2) .......................................................................
.....................................................................................

3)
.......................................................................................................................................
...................

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தமிழ்
# அலகுப்பரீட்சை - 08

**தரம்- 05** **நேரம் 45 நிமிடங்கள்**

**01).பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தேனீ உருவாக்கும் பானம் தேனாகும். இவை மலைகளிலும் மரங்களிலும் வீடுகளிலும் கூட்டினை அமைத்து வாழ்கின்றன. இராணித் தேனீ, ஆண் தேனீ, வேலைக்கார தேனீ என ஒரு இலட்சம் வரையான தேனீக்கள் இருக்கின்றன. இராணித்தேனீயின் கட்டளையின் படியே ஏனைய தேனீக்கள் செயற்படுகின்றன. தேனைச் சேகரிப்போர், மெழுகு தயாரிப்போர், தேன் உற்பத்தி செய்வோர், கூடு கட்டுவோர், தண்ணீர் கொண்டு வருவோர் என பல பிரிவினர் உள்ளனர். தேனீக்கள் அறுகோண வடிவில் மெழுகிட்டு இடைவெளி இல்லாது அறைகள் அமைத்து கூட்டைக்கட்டுகின்றன. அக்கூடு சூடாகினால் இறக்கைகளை வேகமாக அசைத்து குளிரவைக்கின்றன. குளிர்ச்சியடைந்தால் கம்பளி போல் நெருங்கி நின்று சூடேற்றுகின்றன.

1. தேனீ உருவாக்கும் பானம் எது?

   .....................................................................................

2. கட்டளையைப் பிறப்பிக்கும் தேனீ எது?

   .....................................................................................

3. தேன் கூட்டின் வடிவம் என்ன?

   .....................................................................................

4. பந்தியில் உள்ள உவமானத்தைக் குறிப்பிடுக?

   .....................................................................................

5. ஒத்தகருத்துச் சொல்லைத் தருக?

1. தருக்கள் ..................................................... 2. விரைவாக............................

**(புள்ளி.5×4=20)**

02) **சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.**

1. தேனீயின் குடும்பத்தை....................................................என முன்னுதாரணமாக கூறுவார்கள்.

   ( தனிக்குடும்பம் / கூட்டுக்குடும்பம் )

2. தேனீ கொட்டும் போது ஊசியுடன்............................................. கிழிந்து விடும்.

   (வயிறும் / வாயும்)

3. வேலைக்காரத் தேனீக்களுக்கு கட்டளை இடுபவர் .................................................ஆகும்.

   (இராஜாத் தேனீ / இராணித் தேனீ)

4. தேனீக்கள் தமது கூட்டினை .........................................கொண்டு அமைக்கும்.

(மெழுகு / களிமண்)

**(புள்ளி.4×5 =20)**

**03).பின்வரும் சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

**இனிமையானது, நீங்கள் , எழுதுக, கூறுவார்கள் , இருப்போம் ,**
**கிழிந்து விடும், வாருங்கள் , நாங்கள் , நிரப்பும் , தயாரிப்போம் ,**

| படர்க்கை ஒருமை | படர்க்கைப்பன்மை | முன்னிலைப்பன்மை | தன்மைப்பன்மை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**(புள்ளிகள்5×4=20)**

**04) பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருளை எழுதுக.**

1. தீபா முயலை வரைந்தாள்.

    எழுவாய்........................... பயனிலை.......................
    செயற்படுபொருள்............................

2. சிறுவர்கள் இசைக்கருவிகளை வாசித்தனர்.

    எழுவாய்........................... பயனிலை.......................
    செயற்படுபொருள்............................

3. அதிபர் மாணவர்களை பாராட்டினார்.

    எழுவாய்........................... பயனிலை.......................
    செயற்படுபொருள்......................

4. தோட்டத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

    எழுவாய்........................... பயனிலை.......................
    செயற்படுபொருள்......................

**(புள்ளிகள் 4×5=20)**

05. பொருத்தமான **இளமைப் பெயரைக்** கொண்டு இடைவெளி நிரப்புக.

2. கிளிப்.......................கீக்கீ என்று கத்தியது.
3. யானையின்...................................முன்னே சென்றது.
4. பலமான காற்றினால் மாவின்.................... விழுந்தது.
5. பனையின்........................தாகம் தீர்க்கும்.

**(புள்ளிகள் 5×4=20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தமிழ்
# அலகுப்பரீட்சை-09

தரம் - 05 நேரம்- 45 நிமிடங்கள்

**01) பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

1. க குமரன்
   இலக்கம் 28
   பிரதான வீதி
   ஹட்டன்
   05 01 2020

2. நான் நலமாக உள்ளேன்

3. இன்று உலகளாவியரீதியில் பிளாஸ்ரிக் பொலித்தின் பாவனை அதிகரித்துள்ளது

4. யாரம்மா நீ உனக்கு என்ன வேண்டும்

5.ஆமாம் நண்பரே என்ன செய்வது

**(புள்ளி.5×4=20)**

**02)சரியான விடையை தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.**

1. எதிர்காலத்தில் ஏற்படும் சூழல்..................................யைக் குறைக்க வாய்ப்பு ஏற்படும்.

   (பிரச்சினை / பிரச்சனை)

2. பிளாஸ்டிக்.பொலித்தீன் பொருட்களை மீள்........................க்கு உட்படுத்தபடுத்தலாம்.

   (சுளற்சி / சுழற்சி)

3. நன்றாகப் படித்தால்..............................யில் சித்தியடையலாம்.

   (பரீட்சை / பரீச்சை)

4. பிளாஸ்டிக்கை தமிழில்..............................என்றும் கூறுவர்.

   (நெகிளி / நெகிழி)

5. சூழலில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகி டெங்குக்............................ஏற்படும்.

   (காய்ச்சல் / காச்சல்)

**(புள்ளிகள்.4×5=20)**

**03) பொருத்தமான வித்தின் மரபுப் பெயரைத் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1.மிளகாய் | முத்து |
| 2.பலா | பருப்பு |
| 3ஆமணக்கு | மணி |
| 4.தினை | விதை |
| 5.நிலக்கடலை | கொட்டை |

**(புள்ளி.5×4=20)**

**04) பின்வரும் வாக்கியங்களில் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாகவும் பன்மை வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாகவும் எழுதுக.**

1. பூமியில் உள்ள உயிரினங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன.

.........................................................................................................

2. நாங்கள் சூழலில் ஆரோக்கியமாக வாழலாம்.

.........................................................................................................

3. பொலித்தீன் பிளாஸ்டிக். பாவனையால் தீமைகள் ஏற்படுகின்றன.

.........................................................................................................

4. கடிதம் மூலம் தகவல் அறியலாம்.

.........................................................................................................
.

5. நான் எழுதிய தகவல் அனைத்தும் போதுமானதாக உள்ளது.

.........................................................................................................

**(புள்ளி.5×4=20)**

**05.) பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.**

**1.இன்பம் - துன்பம்**

1.துயில் : உறக்கம். 2. குணவன : மனைவி. 3. இலாபம் : நட்டம் **{..........}**

**2.தோள் கொடுத்தல் - உதவுதல்**

1.எருமை : எக்காளமிடும் 2. முகங்கொடுத்தல் : எதிர்கொள்ளல். 3. உயர்வு : தாழ்வு**{..........}**

3.**சினம் - கோபம்**.

1.அழகு : கவின். 2. திருவள்ளுவர் : திருக்குறள். 3. நடிகன் : நடிகை. **{..........}**

**4.கிளி - பேசும்**

1.நாய் : குரைக்கும். 2. சிறுமி : அழகான. 3.பாம்பு : அரவம் **{..........}**

**(புள்ளிகள்.4 ×5=20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தமிழ்
# அலகுப்பரீட்சை-10

தரம்- 05 நேரம் 45 நிமிடங்கள்

**1.பின்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

வேடர் குலத்தலைவனாக குகன் சிருங்கு பேரம் என்ற நகரில் உள்ள கங்கைக் கரையில் வாழ்ந்து வந்தான்.
குகன் இராமனைக் கண்டு மகிழ்ந்தான். மீனை நெய்யில் பொரித்து மீனும் தேனும் சுமந்து சுற்றத்தார் புடை
சூழ வந்தான். ஆச்சிரமத்தின் முன் நிற்கின்ற வீரனாகிய இலட்சுமணன் , ''நீ யார்? ஏன் வந்தாய்'' என்று
வினாவினான். குகன் ஐயனே ! நான் வேடர் குலத் தலைவன். என் பெயர் குகன் நான் இராமனைக் காண வந்தேன் என்றான்.

1. வேடர் குலத் தலைவன் யார்?

   ......................................................................

2. படர்க்கை வினைச் சொல் ஒன்று எழுதுக?

   ............................................................................

3. இராமனைக் காண குகன் எங்கே வந்தான்?

   ............................................................................

4. முன்னிலைப் பெயர் ஒன்று எழுதுக?

   ............................................................................

5. விசிறியும் சுழியும் சங்கிலிக் கொம்பும். கொண்ட சொல்லை எழுதுக?

   ............................................................................

**(புள்ளிகள்5×4=20)**

**02)சரியாயின் (√) எனவும் பிழையாயின˙(×) எனவும் அடையாளமிடுக.**

1. வேடுவ குலத் தலைவன் இராமன். ( )
2. கைகேயி இராமனின் சிறிய தாயாவாள். ( )
3. இராமன் முதிர்ந்த முனிவர்களைப் பார்த்து புன்னகை செய்தான். ( )

4 .இராமன் வன வாசம் செல்ல இலக்குமணன் காரணமாகும். ( )

5.இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் புரிந்தான்.( )

**(புள்ளிகள்5×4=20)**

**03).அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1. நான் ( வந்தேன் / வந்தோம் )
2. நாம் ( படிக்கிறேன் / படிக்கிறோம் )
3. அவர்கள் ( வந்தனர் / வந்தார்கள் )
4. இராமன் ( சென்றான் / சென்றோம் )
5. கைகேயி ( கூறினாள் / கூறினார் )

**(புள்ளிகள்5×4=20)**

04).கீழேதரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களின் வகைகளை எழுதுக.

1.கண்,கிளை,இலை .......................................

2.சிங்கம் ,கதிரை,பந்து ....................................

3.பாடுதல் ,ஓடுதல் ,படித்தல் .............................

4.சித்திரை,காலை,புதன் .....................................

5.கண்டி, காலி, கீரிமலை .......................................

**(புள்ளிகள்5×4=20)**

**05). குறுக்கெழுத்துப் புதிரைப் பூர்த்தி செய்க.**

**இடமிருந்து வலம்.**

| | | |
|---|---|---|
| 1 | | 2 |
| | | |
| 3 | | |

1.நாம் பாடசாலையில் பெறுவது.

3. நீர் அள்ளப்பயன்படுவது(மாறியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1.கை. என்னும் சொல்லின் ஒத்த சொல்.

2.அடுப்பு எரிக்கப்பயன்படுவது.

**(புள்ளிகள் 4 ×5=20)**

# கோட்டக்கல்வி அலுவலகம் - ஈச்சிலம்பற்று
# தரம்- 05 அலகுப்பரீட்சை-11 தமிழ், நேரம்- 45 நிமிடங்கள்

